# வில்ஹணீயம்

சே. வெ. ஜம்புலிங்

உ

சிவமயம்

# வில்ஹணீயம்

யாழ்ப்பாணத்துப் புலோலி
மகாவித்துவான்
**வ. கணபதிப் பிள்ளையவர்கள்**
மொழிபெயர்த்தது

திருமயிலை
**சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை**
பதிப்பித்தது

சென்னை
**சாது அச்சுக்கூடம்**

1928

**விலை - அணா 3.**

சிவமயம்

# முகவுரை

வில்ஹணீயம் அல்லது வில்ஹண சரித்திரமென்னும் கிரந்தம் சம்ஸ்கிருத பாஷையிலே காசுமீர தேசத்திலே 11-ம் நூற்றாண்டில் விளங்கிய வில்ஹண கவியினாலே தனது விருத் தாந்தத்தைக் கூறுவான் இயற்றப்பட்டது. இதன் சுலோகங்கள் பெரும்பான்மையும் அலங்காரரசம் பொருந்தியவை. இற் றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னர்த் திகழ்ந்த திராவிட வர்த்தன சபையினர் வேண்டுகோளின்படி, யாழ்ப்பாணத்துப் புலோலி மகாவித்துவான் வ. கணபதிப் பிள்ளையவர்கள், இத னைத் தமிழில் மொழிபெயர்த்து 1875ஆம்-ல் அச்சிட்டுதவினர்.

இம்மொழிபெயர்ப்பை யான் வாசித்தபோது அதன் கணுள்ள சந்திரவர்ணனை, கல்வியின் மேம்பாடு முதலிய பாகங் கள் என்மனதைக் கவர்ந்தன. அதனால், வசனநடையிற் சிறந்த இச்சிறுநூல் நின்று நிலவும் வண்ணம் தற்காலத்திற் கேற்ற சில மாற்றங்களைச்செய்து, தமிழாசிரியர் வரலாற்றை யுஞ் சேர்த்து அச்சிடலானேன்.

அச்சிடுவதற்கு முனனர், தமிழாசிரியரின தமையனா குமாரரும், வித்தியாவிநோதரும், எனது ஆப்த நண்பருமாகிய சு. சிவபாதசுந்தரம் பிள்ளையவர்களை உசாவினேன். அவர் கள் அச்சிட ஆஞ்ஞை தந்ததுடன் ஆசிரியர் சரித்திரக் குறிப்புக் களையும் எழுதி யுபகரித்தார்கள். அப்பெருந்தகையார்க்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

திருமயிலை,
விபவ ஆ
வைகாசிமீ.

சே. வெ. ஜம்புலிங்கம்.

# உள்ளுறை

| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| முகவுரை | .... | .... | .... | V |
| ஆசிரியர் சரித்திரம் | | .... | .... | Vii |
| நூல் | .... | .... | .... | 3 |

மகாவித்துவான்

# வ. கணபதிப் பிள்ளையவர்கள்

## சரித்திரச் சுருக்கம்

இவர் யாழ்ப்பாணத்துள்ள புலோலியம்பதியைச் சேர்ந்த சைவ வேளாண் மரபிலே, கல்வி செல்வத்திற் சிறந்த நற்குடும்பத்திலே விளங்கிய வல்லிபுரநாத பிள்ளையின் புதல்வர் மூவருள் ஒருவர். கவி சிரேஷ்டராய் விளங்கிய உடுப்பிட்டி—சிவசம்புப் புலவரிடம் தமிழ் இலக்கிய இலக்கணம் நன்கு கற்றவர். தமிழிலே பாண்டித்திய மடைந்த பின்பு, இவர் சென்னைக்குச் சென்று அங்கே ஆங்கிலமும் சமஸ்கிருதமும் கற்றுச் சென்னைச் சர்வகலாசாலைப் பிரவேச பரீக்ஷையிற் சித்திபெற்றனர். சமஸ்கிருதக் கல்வியிலே ஆர்வம் மிக, அத்துறையிலேயே முழு கவனத்தையுஞ் செலுத்தி அதிற் பெரும் புலமை யெய்தினர்.

பிறகு, இவர் நெடுங்காலம் காஞ்சீபுரத்திலே பச்சையப்ப வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதராக விளங்கியிருந்தார். அதன் பின்னர்த் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரிப் பிரதம தமிழாசிரியராக நியமிக்கப்பட்டார். அங்கே தமிழ்ப்புலமை நடாத்தி வரும் நாளிலே 1895ஆம் நவம்பர்மீ ஏகாதசித் தினத்திலே சிவபத மடைந்தனர்.

இவரியற்றிய நூல்கள் பெரும்பான்மையும் வடமொழி நூல்களைத் தழுவினவைகளே. அவை :—

(1) வில்ஹணீயம்.

(2) இரகுவமிசச் சுருக்கம்.

(3) வாதபுரேசர் சரிதை.

(4) இந்திரசேனை நாடகம்.

(5) இரகுவமிச நேர் மொழிபெயர்ப்பு.

(6) மார்க்கண்டேய புராணம்.

(7) சம்ஸ்கிருத பிரதம வாசக புத்தகம்.

(8) வேதாரணியேசுரர் ஊஞ்சற் பதிகம்.

இவற்றுள், (5)-ம் (6)-ம் அச்சிடப்படவில்லை.

இவர்தம் மாணுக்கருட் சிறந்தோர், இவர் தம்பியாராகிய புலோலி குமாரசாமிப் புலவரும் தங்கையராகிய பார்வதியம்மையாரும். குமாரசாமிப் புலவர் இலக்கண வன்மையிற் சிறந்தவர். அதற்கு அவர் எழுதிய நன்னூற்காண்டிகை யுரைவிளக்கமே சான்ருகும். புலவர் 1926ஆு சிவபதமடைந்தனர். தங்கையார் இலக்கிய அறிவிற்சிறந்து விளங்கியவர். அவரது மாணவியரிருவர் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீக்ஷையிற் சித்திபெற்றிருப்பது அவ்வம்மையாரது புலமையை வெளிப்படுத்தும்.

மொழிநூலாசிரியராகிய மாகறல்-கார்த்திகேய முதலியார், பிள்ளையவர்கள் சென்னையிலும் காஞ்சியிலும் இருந்த காலையில் தாம் அவரிடம் பலநூல்களைச் சந்தேக விபரீதமறக் கேட்டறிந்ததாகப் பலமுறை என்னிடம் கூறியுள்ளார். அன்றியும் தாமியற்றிய மொழிநூலின் ஆசிரியர்வணக்கத்தில் பிள்ளையவர்களைத் தமது ஆசிரியர் மூவருள் ஒருவராகப் பாராட்டியுமுள்ளார். ஆகலின், முதலியாரும் பிள்ளையவர்கள் மாணக்கர் வரிசையிற் சேர்ந்தவரே.

ஆசிரியர் காலத்தில் சென்னையில் விளங்கிய திராவிடவர்த்தன சபையினர், பல சம்ஸ்கிருத நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டனர். அவற்றுட் சிறந்தவை நீர்வேலிச் சங்கரபண்டிதர் மொழிபெயர்த்த அகநிர்ணயத் திராவிடவியாக்கியை முதலியன. அச்சபையைச் சேர்ந்த மகா பண்டிதர்களான திருவேங்கடாசாரியர், ஸ்ரீநிவாசாசாரியர் என்னும் இருவர் மாட்டும் நமதாசிரியர் பெருமதிப்புக் கொண்டிருந்தமை இந்நூலின் 27, 30-ம் பக்கங்களால் அறியலாகும்.

உ

கணபதி துணை

# வில்ஹணீயம்

## கணேசர் துதி

நீலாம் புதகிறத்து நித்தியன்றாழ் காருண்யக்
காலாம் புதாகௌரி கண்மணியே—சீலாம்பு
பூரித்தோர் வல்வினைகள் போக்குபரா வென்னிதயம்
பூரித்தே மல்கப் புரி.

## திருத்தணிகாசலேசர் துதி

மண்டல முதலா வுலகெலாம் பரவு
வரம்பில்சீர்த் தணிகைமா மலைவாழ்
வானவர் மகுட மணியணி வரன்று
மருவிரி கமலமென் றாழா
குண்டல வுருவாஞ் சிவகுகா சிருட்டி
தலைப்படு மைந்தொழில் குலவக்
கூறுநான் முகனை முகுந்தனைப் பவனைக்
குறிக்கரு மகேசனை மேலாம்
விண்டல மதிய மவிர்சடை யவனை
விதித்திடு பிரமமே யாரும்
விளம்பரு மோங்கா ரத்தனி யுருவே
விசாகனே விநோதவா வியினிற்
பண்டல மந்த கீரனே யாதி
மெய்யடி யவர்பரு வரலைப்
பார்த்தருள் கருணைத் தீர்த்தனே யடியேன்
பகர்வது பலனுற வருளே.

# விலஹணீயம்

இப் பூமண்டலத்திலே ஒப்பும் உயர்வும் இன்றி விளங்கும் காஞ்சனகிரிக்கு வடதிசையிலே ஞானசார முடைய சற்சனங்கள் நிறைந்த **பாஞ்சாலமென்னும்** ஒரு தேசமுண்டு. அங்கே சகல போகங்களுக்கும் உறைவிடமானதும், நானாவகையான வஸ்துக்கள் நிறைந்ததுமான **இலக்ஷ்மி மந்திரமென்று** சொல்லப்படும் ஒரு பட்டினம் இருந்தது. அப்பட்டினத்திலே பூபாலசேகரனாகிய **மதனாபிராம மகாராஜன்** என்னும் மண்டலேசுரன் வதிந்து பிரஜாபாலனஞ் செய்து வந்தான். அவ்வாறுருகுங் காலையிலே அம்மகாராஜனது பாரியாகிய **மந்தாரமாலை** என்பவள் வயிற்றிலே **யாமினி பூரணதிலகை** என்னும் ஒரு பெண் மகள் பிறந்தனள்.

*யாமினி பூரணதிலகை ஜனனம்.*

தவத்தாலுதித்த அம்மகள், பூர்வ பக்ஷத்து சந்திரன்போல நாளுக்கு நாள் அவயவங்களெல்லாம் பூரண வடிவு எய்தப்பெற்று யௌவனியாகினள்.

*அவயவ வருணனை.*

அவள் நீலமேகத்தையும், கிருஷ்ணபக்ஷத்து இரவையும் பாசியையும் வென்றகுழலாள்; கோடி பூரண சந்திர கலையைப் பழித்த கோமளமான முகத்தாள்; மதனராஜனது தனுவையும் இந்திர வில்லையும் போன்ற புருவமுடையாள்; நஞ்சூட்டிய வேலோ? வாளோ? திருப்பாற்கடலிலுண்டான கொடிய ஆலகால விஷமோ? எனச்சொல்லத்தக்க கண்ணாள்; சண்பகப் புஷ்பத்தையும் குமிழமலரையும் வென்ற நாசியுடை

யாள் ; குமுதம் போன்ற வாயாள் ; [1]கஜகும்ப குசத் தாள் ; சிற்றிடையாள் ; தாமரைச் சேரடியாள்.

இவ்வாறு சாமுத்திரிக சாஸ்திரத்திற்கூறிய இலக் கணங்களெல்லாம் குறைவின்றி யமைந்த கன்னிகா ரத்தினமாகிய யாமினி பூரணதிலகை ஒருவர் சகாயமுமின்றிச் சங்கீத சாஸ் திரத்திலே மகா சாமர்த்தியவதியா யிருத்தலேயும், [2]சாஹித்தியத்திலே சிறிதும் பயிற்சியின்றி யிருத்தலேயும் மதனுபிராம மகாராஜன் பார்த்து அவளைச் சகல சாஸ் திர [3]நிபுணை ஆக்குவிக்க வேண்டுமென்னுங் கருத் துடையானுய்த் தனது பிரதான மந்திரியை அழைத்து,

சாஹித்தியம் கற்பிக்க அரசன் ஆலோசித்தல்.

விருத்தம்

மந்திரி கேளா யென்றன் மாதவந் தன்னல் வந்த
சந்திர வதனி யாகுந் தையல்சங் கீதந் தன்னில்
தந்திரி வீணை தன்னிற் சமமிலாள் சாஹித் யந்தான்
வந்திடும் வகையா தென்ன மகிழ்ந்தெனக் குரைப்பாய் நீயே

“ மந்திரியே ! நான் ஜன்மங்கள் தோறும் செய்த மகா புண்ணியங்களெல்லாம் திரண்டு ஒரு வடிவெடுத்து உற்பவித்தாற்போன்ற என்னரிய புத்திரியாகிய யாமினி பூரண திலகை சங்கீதமென்னுஞ் சமுத்திரத் தைக் கடந்தனள் ; இனி அவள் சாஹித்தியத்திலும் இத்தன்மையதான பாண்டித்தியம் அடையவேண்டு மென என் மனத்தே ஒரு [4]வாஞ்சை ஜனிக்கின்றது. ஆதலாலே, என் கருத்து எப்படிச் [5]சம்பூரணமாகும் ? நீ சொல்வாய் ” எனக் கேட்டனன்.

---

[1]யானை மத்தகம். [2]இசையின்படி பாடல்.
[3]மிக வல்லவள். [4] பிரியம். [5]நிறைவேறும்.

பண்டிதர்களைத் தருவிக்கும்படி மந்திரி கூறுவது.

மகாராஜன் சொல்லிய வார்த்தையைக் கேட்ட மந்திரி சந்தோஷமடைந்து சிரசின் மேலே [1]கரகமலங்களைக் கூப்பி [2]விநயத்தோடு நின்று,

விருத்தம்

மன்னனே மன்னர் சூடு மகுடரத் தினமே கேளாய்
இன்னகைத் துவர்வாய் நங்கை யெழின்மணி மேனி காணில்
கன்னல்வின் மதன ராஜன் காமசா கரத்து வீழ்வான்
அன்னதால் யாவ ரன்னாட் கரியநூ லறிவிப் பாரே.

மகாராஜ [3]சூடாமணியே! உமது புத்திரியாகிய யாமினி பூரண திலகையினது [4]கோமளமான மேனியின் சுந்தரமெல்லாம் ஆயிரம் நாவினைப்படைத்த ஆதிசேஷனும் சொல்ல வல்லவனல்லன். யாவர்மேலும் பஞ்சபாணப் [5]பிரயோகஞ் செய்து மோகக் கடலுள் வீழ்த்தும் காமராஜனும் இவளது மேனியின் அழகைக் காண்பனேயானால் அக்கணத்தே தானே அம்மோகக் கடலுள் வீழ்ந்து மூர்ச்சையாவன். அப்படியானால் காமாயுதத்தைச் சகித்து இவளுக்குச் சாஹித்தியம் படிப்பிக்க வல்லவர் யார்? ஆயினும் உமது மனப் பிரீதிக்குப் [6]பிரதிகூலமாய் நான் யாதும் சொல்லேன்; இந்நகரிலே சகலகலா பண்டிதர்கள் அனேகர் வசிக்கிறார்கள்; அவர்களை அழைப்பித்து ஆலோசனை செய்வீராக" என்றான்.

அவ்வார்த்தையைக் கேட்டவுடனே மகாராஜன் தனது இலக்ஷுமிமந்திர பட்டினத்து வசிக்கும் பண்டி

---

1 தாமரைபோன்ற கைகள். 2 மரியாதையோடு. 3 தேவமணி. 4 மிருதுவான. 5 செலுத்தி. 6 மாறுக.

காவியா லங்காரச் சிறப்பு.

தர்கள் யாவரையும் தனது சபைக்கு அழைப்பித்து அவ்வவர் யோக்கியதைகளுக்கேற்ப ஆசனங்கள் கொடுத்து வீற்றிருக்கச் செய்து விநயத்துடனே நின்று "வித்துவ [1]சிரோமணிகாள்! நீவிர் எவ்வெச் சாத்திரங்களிலே வல்லீர்?" என்று வினவினன். அப்போது சந்திரோதயங் கண்ட [2]சகோர பக்ஷிகள் போலவும், கார்மேகத்தைக் கண்டு கலாபங்களை விரித்து நடிக்கும் மயில்கள் போலவும் ஆனந்தமடைந்து பண்டிதர்கள் யாவரும் "பூபாலசிங்கமே! நாங்கள் தர்க்கம், வியாகரணம், புராணம், வேதாந்த சாத்திரம், வேதம், ஆகமம் முதலியவற்றிலே மிகவும் வல்லேம்" என்றனர். அப்போது மகாராஜன் "பண்டிதர்களே! அப்படியானால் நீவிர் யாவரும் என் வரபுத்திரியாகிய யாமினி பூரண திலகையைக் காவிய நிபுணையாக்கி ரசாலங்காரம் அறியும்படி செய்யுங்கள்" என்றனன். அப்போது பண்டிதர்கள் "மண்டலேசா! யாம் ரசாலங்காரம் அறிந்தவரல்லேம், அது கவிகளுக்கே நன்கு தெரியும்; நாங்கள் வேதாத்தியயன முதலியவற்றிலேயன்றி இக்கவிதையிலே பாண்டித்தியம் அடைந்திலேம். மகாராஜனே! கவிதையென்னும் மனோகர விலாச கன்னிகை, வியாகரணம் வல்லானைப் பிதாவென எண்ணியும் தார்க்கிகனைச் சகோதரனென எண்ணியும் [3]சங்கோச முறுகின்றனள்; சந்தசாஸ்திரியைச் சண்டாளனென எண்ணிச் சமீபத்தும் வாராது [4]அரோசிக்கின்றாள்; மீமாம்சம் வல்லோனை அலி

---

[1] தலைவர்காள். [2] சக்கரவாகப் பறவை. [3] வெட்கம்.
[4] அருவருப்புறுகின்றாள்.

எனக்கருதி நிந்திக்கின்ருள்; காவியாலங்காரங்களில் வல்லானையே தனது மனத்திற்கியைந்த [1]கமனீயவேஷ யௌவன காந்தன் என்றெண்ணி அவனை ஆலிங்கனஞ் செய்து, எப்போதும் அவனேடு சுகமடையக் கருது கின்ருள்'' என்றனர்.

அதுகேட்ட மதனுபிராம மகாராஜன் "பண்டிதர்களே! ரசாலங்கார நிபுணனும் நவீனகாவியங்கள் செய்யவல்லானும், சந்தநாடகங்களின் தத்துவங்களைப் பூரணமாய் அறிந்தவனுமாகிய ஒருகவி உளனேல் அவன் யாவன் எனச் சொல்லுங்கள்'' எனக் கேட்டான். அப்போது பண்டிதர்கள், "மண்டலேசுரா! வில்ஹணன், மல்ஹணன் என்று காவிய நாடக சந்தங்களில் வல்ல கவிராஜர் இருவர் உளர்; அவருள்ளும் வில்ஹண கவிராஜனே விசேஷ [2]தரமுடையவன்; பல்வகையான வண்ணமுள்ள வஸ்திரங்களுள் வெண்டுகில்போலவும், அறுவகைப் பருவங்களுள் வசந்தகாலம் போலவும், மலர்களுள் [3]சரற்கால மல்லிகை மலர் போலவும், வில்வல்லாருள் கருப்பம் வில்லினனுய மன்மதன் போலவும், வாசனு வஸ்துக்களுள் சுத்த பரிமள கஸ்தூரி போலவும், சஸ்திரங்களுள் கோதண்டம் போலவும், வார்த்தைகளுள் தர்க்கசாஸ்திரரசம் பரிமளிக்கும் வார்த்தை போலவும், யௌவன மங்கையருள் பதினாறு வயசுப் பெண் போலவும், வயசுகளில் யௌவனம் போலவும், சமயங்களுள் பஞ்ச கிருத்தியங்களும் நடைபெறற்குக் காரணமான ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளும் சிவபிராணுலே அருளப்பட்டதான

வில்ஹண கவியின் மேன்மை

---

[1]விரும்பிய. [2]பக்குவம். [3]மாரிகாலம்.

சைவம் போலவும், கீதங்களுள் பஞ்சமலயை போல வும், வித்துவ சங்கத்துள் வில்ஹணனே அதியுத்த மன்" என்றனர். அப்போது மகாராஜன் "பண்டி தர்களே! நான் கவிராஜனுன வில்ஹணனை ஒருகாலுங் கண்டிருக்கவில்லை; அக்கவியை அதிவிரைவில் என் சபைக்கு அழைப்பியுங்கள்; காண மிகுந்த [1]அபே க்ஷையினனுய் இருக்கின்றேன்" என்முன்.

உடனே மகாராஜனது கட்டளைப்படியே சிலர் சென்று வில்ஹண கவியை அழைக்க, அவன் [2]சம்பிர மத்துடன் இராஜ சமூகத்துக்கு வந்து, தேவாசாரியராகிய பிரகஸ்பதி சுதன்மை யென்னும் இரத்தின கசித மான மண்டபத்தின் மேனின்று தேவேந்திரனுக்கு ஆசிர்வாதஞ் செய்தல் போல, மதனுபிராம மகாராஜனுக்கு ஆசீர்வாதஞ் செய்த னன். அதுகண்டு சிரத்தையுடன் மகாராஜன் எழுந்து நின்று, சந்திரோதயங்கண்ட குமுதமலர்போலச் சந் தோஷத்தினுலே அகமும் முகமும் மலர்ந்து கமல நேத்திரங்களாலே பிரீதியுடன் கவிராஜனைப் பார்த்து, "இராஜகிரீட ரத்தினமே! வித்துவசிரோமணியே! கவீந்திரா! நீர் க்ஷேமமா யிருக்கின்றீரா? சகலசுகங் களேயும் அனுபவிக்கின்றீரா? உமது பரிசுத்த கீர்த் தியை இப்பண்டிதர்கள் சொல்லக்கேள்வி யுற்றேனே யன்றி உமது புண்ணிய திருமேனியை ஒரு நாளே னுங் கண்டிலேன்; இதுவே [3]சுதினம்; நீர் எவ்வளவு காலமாய் இந்நகரிலே வாசஞ் செய்கின்றீர்? உமது காலம் வித்தியாப்பியாசமாகிய உத்தம விஷயத்திலே

அரசன் கவிக்குக் கொடுத்த வரிசை.

[1]ஆசை. [2]இடம்பத்துடன். [3]நல்லநாள்.

கழிந்தது மிகவும் நன்று நன்று; உம்மைப் புத்திரனுகப் பெறற்கு உமது தாயும் தந்தையும் பூர்வஜன்மங்கடோறும் என்ன புண்ணியஞ் செய்தனரோ? இந்நகரத்திலே நீர் வசிக்கும்படி நானும் என் பிரஜைகளும் யாது தவம் புரிந்தோம்? என் கண்களிரண்டும்செய்த புண்ணியத்தினுலே மகா [1]துல்லபமான உமது தரிசனம் இன்று பெறப்பெற்றேன், நன்று நன்று'' என்று பற்பல [2]வாஸ்தவ பூர்வகமான உபசாரப் பிரீதி வசனங்கள் மொழிந்து, கவிராஜனுகிய வில்ஹறணனைத் தனது சிங்காசனத்தின் பாங்கர் வீற்றிருப்பித்து சர்வோபசாரமுஞ் செய்து, தனது மேனியிலிருந்த விலைமதிப்பில்லாத பல இரத்தினுபரணங்களைக் கவீந்திரனது தேகத்தில் தரித்துப் பீதாம்பரங்களும் வெண்பட்டுச் செம்பட்டாடைகளும் கொடுத்து, வந்தன பூர்வகமாய் ஒரு முத்துச் சிவிகையில் ஏற்றி அளவில்லாத சிரத்தையுடன் அவனை [3]யதாஸ்தானத்துக்கு அனுப்பினன்.

வில்ஹறணன் அழகைக் கண்டு அரசன் அதிசயித்தல்.

கவீந்திர சிங்கம் போன பின்பு, தேசு குன்றிய முகத்தோடு மகாராஜன் மந்திரியைப் பார்த்து, [4]"ஆமாத்திய சூடாமணீ! கவீசுரனுகிய வில்ஹறணன் அனந்தம் மன்மதர் ஒரு வடிவெய்திப் பிறந்தாலென்னச் சுந்தரமுடையான்; அவனது அழகு வாய்ந்த மேனியைக் கண்ட கண்ட மாதரெல்லாம் மோக ஜாலத்துள் அகப்பட்டு நாணம் மடம் அச்சம் எனப்படும் இன்றியமையாக் குணங்கள் யாவும் இழந்து, தமது பிராண நாயகரது சுக

[1]அருமையான. [2]உண்மையான. [3]தகுந்த இடத்திற்கு. [4]மந்திரித் தலைவ.

கரமான [1]சங்கமத்தையும் விட்டு உடனே அவனைப் பின்றொடர்வார்களே! பூமியென்னுங் கற்பக விருக்ஷத்தினது யௌவன மென்னும் நறும்புஷ்ப மஞ்சரி, மங்கையரது [2]அந்தக் காரணங்களாகிய வண்டுகளை [3]ஆகருஷிக்கின்றமை [4]சகஜமே: ஆதலாலே இவனைக் கொண்டு யௌவனியாகிய யாமினி பூரண திலகைக்குக் காவியாலங்காரம் கற்பிப்பது தகுதியன்றே! என் [5]அபிலாஷம் எப்படிச் சம்பூரணமாகும்? ஐயையோ! என் செய்வேன் என் செய்வேன்" என்று வாட்டமுற்றனன்.

**கவியையாமினி பூரண திலகை பாராதிருத்தற்குச் செய்த சூக்ஷி.**

மகாராஜன் [6]சோகித்தலைக் கண்ட பிரதான மந்திரி "பூபாலேந்திரா! மனவாட்ட மொழிக; கவீந்திரனுகிய வில்ஹணனைப் போன்ற [7]சரச கவிகளைக் காண்பது அசாத்தியம் அசாத்தியம்; ஆதலாலே யான் சொல்லப் போகும் உபாயத்தைப் பிரயோகித்தால் யாதேனும் ஓர் ஆக்ஷேபமுமின்றி உமது இஷ்ட காமம் சித்தியெய்தும். உமது புத்திரி பிறவிக் குருடனை ஒருகாலும் பார்ப்பதில்லையென விரதநிச்சயஞ் செய்திருக்கின்றாள்; வில்ஹண கவியோ குஷ்டரோகியை எப்போதும் பார்ப்பதில்லையென விரதநிச்சயஞ் செய்திருக்கின்றான்; ஆதலாலே யாமினி பூரண திலகைக்கு வில்ஹண கவி பிறவிக் குருடனெனச் சொல்லியும், வில்ஹண கவிக்கு யாமினி பூரண திலகை குஷ்டரோகிணி எனச் சொல்லியும், ஒருவரையொருவர் காணவொட்டாது

---

[1]கூட்டம். [2]உட்கருவி. [3]இழுக்கப்படுகின்றமை.
[4]உண்மை. [5]விருப்பம். [6]துக்கித்தல். [7]இனிய.

இருவர்க்குமிடையே ஒரு திரைச்சீலை கட்டி, வில்ஹண கவியைக்கொண்டு உமது புத்திரிக்குக் காவியாலங்கார நாடகம் கற்பிப்பதே உத்தம [1]சூக்ஷி" என்றனன்.

அரசன் மகளை வேண்டுதல்

அவ்வார்த்தையைக் கேட்டலும், [2]காடாந்தகாரம் நிறைந்த இரவிலே சமுத்திர மத்தியிலே பிரசண்ட மாருதம் வீச, [3]உல்லோல கல்லோலங்கள் எழுந்து ஆகாசமளவுக்கு வீச, ஒரு [4]நாவாயிலிருக்கும் ஜனங்கள் தமது பிராண [5]ரக்ஷணத்திற்கு ஏதுவான துறையொன்று காண்டலும், எவ்வளவு ஆனந்த மடைவார்களோ, அவ்வளவு ஆனந்தம் மகாராஜன் அடைந்து அக்கணத்தே தனது புத்திரியைத் தன்முன் அழைப்பித்து, "குழந்தாய்! நீ சாஸ்திரங்களைக் குருமுகமாய்க் கற்றல்வேண்டும். இப் பட்டணத்திலே கவி [6]சிரேஷ்டனான வில்ஹணன் என்றொரு கவிவாணன் இருக்கின்றான். அவன் பிறவிக் குருடனாயினும் அவன் போலச் சாமர்த்தியமான கவி வேறில்லை. ஆதலாலே, என்னருமை மகளே! நீ அவனிடத்திலே காவிய நாடகாலங்காரம் கற்றல்வேண்டும்" என்றான்.

அப்போது யாமினி பூரணதிலகை கைகளாகிய செங்காந்தட் பூக்களைக் குவித்து முல்லைவாணகை விளங்கப் பிதாவினது முக கமலத்தைப் பார்த்து "என் தந்தையே! பிறவிக் குருடனை நான் ஒருகாலும் காண்பதில்லை; இது என் விரதம். இவ்விரதத்திற்குப் பிரதிகூலமாய் நீர் சொல்வது தகுதியன்று" என்றாள்.

---

[1]உபாயம். [2]கனவிருள். [3]அலைகள். [4]மரக்கலம். [5]காத்தல். [6]தலைவன்.

அதுகேட்ட மகாராஜன், "என் அருமைப் புத்திரியே! உன் விரதம் இதுவேயானால், உனக்கும் வில்ஹண கவிக்கும் இடையே ஒரு திரைச்சிலை இடுவிக்கின்றேன்; நீ யாதேனும் [1]கிலேசமின்றி விரைவிலே சாஹித்தியம் கற்பாயாக" என்று சொல்ல, அரசகுமாரியும் அதற்குச் சம்மதித்துப் போயினள்.

சாஹித்தியம் கற்பிக்கக் கவியை வேண்டுதல்

பின், உடனே மகாராஜன் வில்ஹண கவியைத் தன் முன்னிலையில் அழைப்பித்து, "கவிசிகாமணியே! குஷ்டரோக முடையாளாகிய என்புத்திரிக்கு நீ காவிய நாடகாலங்காரம் கற்பிக்க வேண்டும்" என்றான்.

அப்போது கவீந்திரன் இராஜனைப் பார்த்து "பூமண்டலேசா! குஷ்டரோக முடையாரை ஒருகாலுங் காண்பதில்லையென்பது என்விரதம். ஆதலால் எப்படி உமது ஆஞ்ஞைப்படி நடப்பேன்?" என்றான்.

அது கேட்டு மகாராஜன், "வித்துவசேகரா! உன் விரதம் இதுவானால், நீ என் புத்திரியைக் காணவொட்டாது இருவர்க்கு மிடையே திரைச்சீலை கட்டுவிப்பேன். நீ ஒரு கிலேசமுமின்றி அவளுக்குக் கற்பிக்க வேண்டியதைக் கற்பிக்கலாம்" என்றான்.

அப்பொழுது கவீந்திரன், "மகாராஜனே! உமது அபேக்ஷை இதுவேயாயின் நான் சிறிதும் ஆக்ஷேபமின்றி உமது கட்டளைப் பிரகாரமே நடப்பேன்" என்றனன்.

---

[1]பயம்.

இப்படிச் சொல்லி வில்ஹணகவியை வீட்டுக் கனுப்பிய பின்பு மகாராஜனும் அவனது பிரதான மந்திரியும் தமது தந்திர சூட்சி [1]சபல

வித்தியாரம்பம் செய்வித்தது.

மானது என்பதைச்சுட்டி அளவில்லாச் சந்தோஷமடைந்து, பின்பு சோதிடனை அழைப்பித்து வித்தியாரம்பத்திற்குத் தகுதியான சுபதினத்தை விசாரித்து, கவிராஜனை அழைப்பித்து விக்கினங்களை நீக்கும் பொருட்டு கணபதிக்குப் பூசனைசெய்வித்துப் பின்பு சரஸ்வதி தேவியைப் பிரார்த்தித்து வித்தியாரம்பஞ் செய்வித்தனர். வித்தியாரம்பஞ் செய்த பின்பு, அங்கு வந்த பண்டிதர்களுக்கும் வேத பிராமணர்களுக்கும் வஸ்திரம், பொன், தாம்பூலம் முதலிய வழங்கி, அவர்களையெல்லாம் நன்கு [2]சம்பாவனை பண்ணித் தத்தம் இருக்கைகளுக்குப் போகும்படி [3]உபசார பூர்வகமாய் அனுப்பி மதனுபிராம மகாராஜன் ஆனந்தத்துடன் இருந்தனன்.

கவிராஜனுகிய வில்ஹணன் காலந்தோறும் பிரீதியுடனே இராஜ குமாரியாகிய யாமினி பூரண

சாஸ்திரங்களில் பாண்டித்தியம் எய்தியது.

திலகைக்கு வித்தை பயிற்றிவருங் காலத்திலே அவள் அவன் சகாயத்தினுலே, நானுவகையான அலங்காரங்களிலும் நவரச யுக்தமான காவியங்களிலும் சாஸ்திரங்களிலும் யாவரது மனசையுங் கவரும் நாடகங்களிலும், சந்த சாஸ்திரத்திலும் காமசாஸ்திரத்திலும் இன்னும் எண்ணிறந்த விஷயங்களிலும் வில்ஹண கவியிலும் பன் மடங்கு பாண்டித்தியம் அடைந்தாள். இப்படியாயிருக்குங்

[1]அனுகூலம். [2]காணிக்கை. [3]முன் மரியாதையாக.

காலத்திலே மன்மதராஜனுக்குச் சகாயமாயிருக்கும் வசந்த காலத்திலே சித்திரை மாசத்திலே, பூரணையி னிரவிலே, சந்திரன் கிரணகோடிகளைப் பரப்பி ஆகாசத்திலே யாவரும் மகிழும்படி பிரகாசித்தது.

சந்திரன் செய்கை.

மேகபடலம் சிறிதுமின்றித் தூயதாக விளங் கும் ஆகாசத்திலே [1]சோடச கலைகளையும் பரப்பிச் சந்திரன் உதித்தவுடனே, அதைக் கண்ட ஜனங்கள் "இது மலர்ந்த குமுத புஷ்பமோ? ஆகாசத்திலே வைத்த இரத்தின கும்பமோ? காமராஜனது மாயா ஜால [2]தர்ப்பணமோ? [3]காமினி ஜனமாரணமோ? இருளாகிய யானைக் குழாங்களை ஓட்டும்பொருட் டெழுந்த சிங்கமோ? இது யாதோ?" என்று அதிசய முற்றுச் சொன்னார்கள். பூரண சந்திரன், குமுதம், நீலோற்பலம் முதலியவற்றின் முகங்களை மலர்வித் தும், சகோர பக்ஷிகளின் மன [4]வியாகுலத்தை ஒழித் தும் தாமரைப் புஷ்பங்களின் முகங்களைக் குவித்தும், யௌவன மங்கையரது மானத்தைக் குலைத்தும் கிர ணங்களாகிய நெடுங் கைகளை நீட்டித் திசாமுகங்களி லுள்ள [5]அந்தகாரத்தை ஓட்டியும், சமுத்திரத்தை ஆனந்திப்பித்தும் சோபித்தலைச் சயனத்திலே கிடந்து துயின்ற வில்ஹணகவி சாளரவழியாய்க் கண்டு சந் தோஷித்து, விரகநோய் நாகத்தின் விஷமேறுவது போலத் தலைக்கொள்ள உடனே எழுந்திருந்து மன சிலே கொண்ட [6]தாபங் காரணமாக அச்சந்திரனை வர் ணிப்பானாயினன்.

---

[1]பதினாறு. [2]கண்ணாடி. [3]காமுகர்களுக்கு யமனோ?
[4]துக்கம். [5]இருள். [6]வெம்மை.

"நக்ஷத்திரேசனே! உன் உதாத்துள்ளிருக்கும் [1]சின்னத்தைச் சிலர் ஆலமரம் என்றும், சிலர் முயல் என்றும், சிலர் கோமளமான மான் என்றும், சிலர் விஷமென்றும் பலவாறு சொல்கின்றனர். இது ஆகாசமன்று, சமுத்திரமே! இங்கே பிரகாசிப்பன நக்ஷத்திரங்களல்ல, சமுத்திர ஜலத்தின் குமிழிகளே! இது சந்திரனன்று, சர்ப்பேந்திரனாகிய சேஷனது குண்டலமே! இது முயற்களங்கமன்று, யோக நித்திரை செய்யும் விஷ்ணுவே!"

சந்திர வருணனை.

"சந்திரனுள்ளே இருக்கும் மறுவைச் சிலர் முயற்களங்கமென்றும், சிலர் சமுத்திரத்தின் சேறு என்றும், சிலர் [2]சாரங்கம் என்றும், சிலர் பூமியின் சாயை என்றும், சிலர் இந்திர நீலரத்தினத்தின் ஒளியென்றும் தத்தமது மனத்துக்கியைந்தவாறு சொல்கின்றனர். இரவிலுள்ள அந்தகாரமெல்லாம் பருகப்பட்டு இச்சந்திரனது வயிற்றினின்றன எனவே எனக்குத் தோன்றுகின்றது."

"சந்திர விம்பமானது ஆகாசமாகிய கல்லிலே அரைத்துத் திரட்டிய பரிமளச் சந்தனத்திரட்சி போலத் தோன்றுகிறது; அதனுள்ளிருக்கும் களங்கம், அச்சந்தனத் திரட்சியினுள்ளே சேர்த்த கஸ்தூரி போலத் தோன்றுகின்றது."

"ஆ! ஆ! பெண்ணே! இச்சந்திரன் ஆகாசமாகிய தடாகத்தில் அலர்ந்த வெண்டாமரை மலரோ? மன்மத பாணங்கள் தீட்டும் சாணைக் கல்லோ? சந்தியா கால

---

1 அடையாளம். 2 வில்.

மாகிய ஸ்திரீயின் பங்கோ? இது யாது என்று பார்'' என வில்ஹணகவி ஆனந்தாதிசயத்தினாலே சந்திரனை வர்ணித்தனன்.

*யாமினி பூரணதிலகை வில்ஹண கவியைப் பார்ப்பது.*

யாமினி பூரணதிலகை "இது என்ன ஆச்சரியம்? பிறவிக்குருடனுக்குச் சந்திரவிம்பத்தை வர்ணிக்கும் சக்தி எப்படி உண்டாயிற்று? இவன் கூறும் வர்ணனை எவர்க்கும் ஆனந்தகரமாய் இருக்கின்றது; என் விரதத்துக்குப் பங்கமுண்டாகுமாயினும் உண்டாகுக. நான் இவனை எப்படியேனும் பார்க்க வேண்டும்'' என்று சயனத்தினின்றும் எழுந்து நின்று, தன் கையினாலே திரைச் சீலையை நீக்கி, [1]வாதாயன வழியால் முன்னே சந்திரனைப் பார்த்துப் பின்பு வில்ஹண கவியைப் பார்த்தாள்.

*யாமினி பூரணதிலகையைக் கண்டு கவி புகழ்தல்.*

அனந்தம் மன்மதர்கள் ஒரு வடிவெடுத்துப் பிறந்தாற் போன்ற அழகுவாய்ந்த வில்ஹண கவியைக் கண்ட மாத்திரத்திலே மன்மத பாணங்களால் மூர்ச்சை யடைந்தனள். அப்பொழுது கவீசுரனாகிய வில்ஹணன் கிழக்குத் திசையிலிருக்கும் உதயகிரிச் சிகரத்தின் மேற்றோன்றிய பூரண சந்திரன்போன்ற அவள் முகத்தைக் கண்டவுடனே, மோகியாகி "இது பதும புஷ்பமோ, தருப்பண விம்பமோ, முகமோ? இவைகள் மற்சங்களோ, நீலோற்பலங்களோ, மதன பாணங்களோ, கண்களோ? இவைகள் சக்கர வாகங்களோ, பூம்பந்து

[1]பலகணி.

களோ, கனக கலசங்களோ, ஸ்தனங்களோ? இவ்விடந் தோன்றிய உரு மின்னலோ, நக்ஷத்திரமோ, [1]சுவர்ணச் சலாகையோ, யௌவன மங்கையோ? இது முகமன்று, முயற்களங்க மின்றிய சந்திரனே! இவைகள் ஸ்தனங்களல்ல, பூரண அமிர்த கும்பங்களே! இது [2]அளகபந்தியன்று, காமாயுத சாலையே! இவைகள் நேத்திரங்களல்ல, யௌவன புருஷர்களைப் பந்திக்கும் விலங்குகளே! அந்தகார சமூகமும், சந்திர பாகமும், இந்திர வில்லும், இரு நீலோற்பல மலரும், பதும புஷ்பமும், சங்கும், சுவர்ண கும்பங்களிரண்டும், ஆலிலையும், மின்னலும், இரண்டுவாழைத்தண்டும், எவ்வாறே ஒன்றாய்ச் சேர்ந்து எனக்குச் [3]சித்தப்பிரமையை உண்டாக்கி [4]மதனபீடை ஜனிப்பிக்கின்றன" என்று புலம்பினன். அச்சமயத்திலே அவனது ஜோதிமுகத்தைக் கண்டு யாமினிபூரணதிலகை நாணி "நான் இவர் சமீபம் போனால் என்னை அங்கீகரிப்பாரோ, அல்லரோ அறியேனே" என்று துக்கத்தோடே மனத்திலெண்ணிப் பெருமூச்செறிந்து பின்பு திரைச்சீலையை விட்டுப் பாயலில் வீழ்ந்து மதனபீடையுற்றாள்.

வில்ஹணன் தன் கருத்தைக் குறிப்பிடுதல்.

அதைக் கண்டவுடனே வில்ஹண கவி அதிமோகமுற்றுச் சொல்லுவானாயினன்:—

**கொச்சகம்**

அன்னப் பெடையே அழகார் பசுங்குயிலே
கன்னி யரசே கருதுமணி மாமயிலே

---

[1]பொன் ஈட்டி. [2]மயிர் முடிச்சு.
[3]அறிவு மயக்கம். [4]காம நோய்.

மின்னற் கொடியே மிளிர்காம பூஷணமே
உன்னைப் பிரிந்தேனேல் உய்வனோ கண்மணியே.

மானே மடக்கொடியே மாரவேள் சாயகமே
தேனே சுராமுதே தித்திக்குஞ் செங்கரும்பே
ஊனே டுயிருருகி யுள்ளமெலாஞ் சோருகின்றேன்
யானோர் செயலறியேன் யாதுபுரிவேன் மதியே.

காமசரம் பீறியையோ காயமெலாஞ் சோருகின்றேன்
வாமமணி மேகலையே வந்ததா பானமெனும்
சோமசுதை யீந்தேயென் றுக்கமெலாம் போக்குவையேல்
நாமமுறு நின்றனக்கு நாணொருவி நீயிரங்கே.

இதைக் கேட்டலும் இராஜ குமாரியாகிய யாமினி பூரணதிலகை தன்கருத்துக்குக் கவிராஜன் சம்மதித்தனனென வறிந்து, உடனே சந்தோஷத்துட னெழுந்து பேரவா வுடனே செங்காந்தள்மலர் போன்ற கோமளக் கைகளால் அவனை ஆலிங் கனம் செய்தனள்.

யாமினி பூரண திலகை வில் ஹணனுடன் மருவுதல்.

இப்படியே நடைபெற்று வருங் காலத்திலே சுக்கில பக்ஷத்து சந்திரன்போல, அவ்விருவருக்கும் இடையே [1]அநுராக சகிதமான சினேகம் விருத்தியானது. அநுராகபோக மிகுதியினாலே அவ்விருவரும் "எக் காலத்திலேனும் எம்மிருவருக்கும் பிரிவு சம்பவித்தால் யாம் அதை எப்படிச் சகிப்போம்" என்று பலவாறு சொல்லிக் கொண்டிருந்தனர். இவ்வண்ணமாக நடைபெறுங்

மகள் செயலுணர்ந்து அரசன் துக்கித்தல்.

[1]தொடர்ந்த விருப்பு.

காலையிலே, ஒருநாள் யாமினி பூரண திலகை [1]அப்பி யங்க ஸ்நானஞ் செய்து திவ்விய பட்டு வஸ்திரந் தரித்து, சந்தனுதி பரிமள வஸ்துக்கள் தேகத்தி லணிந்து, மேக படலம்போலக் கேசத்தை விரித்து, அதற்கு அகில் நறும் புகையூட்டி, உலர்த்தும் பொருட்டு [2]அரமியத்தின் மேனின்று உலாவுஞ் சமயத்திலே, காமவல்லிபோன்ற அவளது மேனியெல்லாம் வாடியிருத்தலையும், காலைப்பொழுதில் உதிக்கும் [3]பாலாதித்தியன் போன்ற முகம் சரற்காலத்து அர்த்த ராத்திரியிற் பிரகாசிக்கும் பூரண சந்திரன் போல வெளிறி யிருத்தலையும் மதனுபிராம மகாராஜன் கண்டு, அவள் வில்ஹணகவியோடு மருவினள் என நிச்சயித்து, அவளை ஒரு மறைவிடத் தழைத்து, "மகளே, நானுதேசத்தும் வசிக்கும் இராஜகுமாரர் களையும் என்னரிய மணிமண்டபத்தி லழைத்து உன் சுயம்வரம் நிகழவும், உனது கலியாண முதலியவற்றைக் காணவும் மிகுந்த அபேக்ஷையுடன் எண்ணியிருந்தேனே; என் [4]பிரவேக்ஷணம் வீணுனதே! என் குழந்தாய், இதுவோ உன்கதி. [5]ஸ்படிகம் போன்ற என் குலத்திலே களங்க முண்டாக்கினையே. இந்நகரில் வசிப்போர் யாவரும் உன்னைக் குறித்து அபகீர்த்திகரமான வார்த்தை சொல்கின்றுர்களே; இதுவோ உன் ஜனனத்தால் நான் அடைந்த பயன்? குழந்தைகளைப் பெறுவதாலே ஈன்றேர்க்குக் கீர்த்தியும் மகிழ்வும் பெருமிதமும் உண்டாகுமே. உன்னைப் பெற்றதனுலே எனக்கும் மந்தாரமாலைக்கும் நீங்காத

[1]எண்ணெய். [2]நிலாமுற்றம். [3]இளஞ் சூரியன்.
[4]அபிப்பிராயம். [5]பளிங்கு.

வசையும், துயரும், இலச்சையும் உண்டாயினவே. யானை மதத்தினாலும், ஆகாசம் மேகக் குழாத்தினாலும், இராத்திரி பூரண சந்திரனாலும், குதிரை வேகத்தினாலும், தேவாலயம் நித்தியோற்சவத்தினாலும், வாக்கு வியாகரணத்தினாலும், நதிகள் அன்னக் கூட்டங்களினாலும், மகாசபை பண்டிதராலும், மூன்று லோகமும் சூரியனாலும் [1]சோபித்தல்போல, குலம் உத்தம மகவினாலே சோபிக்கும். நீ சங்கீதத்திலும் காவிய நாடகாலங்காரங்களிலும் அடைந்த பாண்டித்தியத்தை எண்ணியெண்ணி அதிசந்தோஷம் அடைந்திருந்தேனே. என் மகளே! இப்படியானயே! உன்னைம் உச்சரிக்கவும் எனக்கு இலச்சை ஜனிக்கின்றதே. குழந்தை இல்லையென்று நெடுங்காலமாய், நானும் உன் தாயாகிய மந்தாரமாலையும் மகாதவஞ் செய்தோமே. அனேக விரதங்கள் அனுஷ்டித்தோமே; நானா வகையான தான தருமங்கள் வழங்கினோமே; எண்ணில்லா முனிவர்கள் ஆச்சிரமங்களுக்குப் போய் அவர்களை யெல்லாம் சேவித்தோமே. சிவராத்திரிகள்தோறும் ஆகாரமும் நித்திரையுமின்றிச் சிவபிரானைச் சேவித்து வந்தோமே; கால்கள் வருந்தத் தீர்த்த யாத்திரை செய்தோமே. கங்கை, யமுனை, நருமதை, சரஸ்வதி, கோதாவரி, கோமதி, துங்கபத்திரை, சரயு, தமசை, கிருஷ்ணை, காவேரி, வேகவதி, வேத்திரவதி, தாமிரவர்ணி ஆகிய புண்ணிய நதிகளிலே ஸ்நானஞ் செய்தோமே. இத்தனை கஷ்டமெல்லாம் அனுபவித்து உன்னைப் பெற்றோமே. இப் புண்ணியங்களின் பயனாய் நீ பிறந்தும், இவ்வசை

[1]பிரகாசித்தல்.

யடைந்தனையே. குழந்தாய், என் செய்வேன் நான்? இது கண்டும் நான் இன்னும் பிராணனோடு இருக்கின்றேனே " என்று துக்கத்தோடு சொன்னான்.

அதுகேட்டு யாமினி பூரண திலகை காந்தளங்கைகள் கூப்பி நமஸ்காரம் பண்ணி "பிதாவே! இது எல்லாம் உமது தந்திரப் பிரயோகத்தால் விளைந்ததே; உம்மாலே வந்த தோஷத்துக்கு நீர் துக்கிக்கலாமா? நீரே இருவர் மத்தியினும் திரைச்சீலையைக் கட்டுவித்தீர்; அது எங்கள் இருவர்க்குப் போகத்தையும், உமக்குச் சோகத்தையும் உண்டாக்கியது. அது எமக்குப் பாணிக்கிரகணத்தையும், உமக்கு அபகீர்த்தியையும் விளைத்தது. இனித் துக்கித்தலால் யாதுபயன்? ஆகாச மார்க்கமாய்ச் சஞ்சரிப்பவனும் சகல பிராணிகளின் பீடையை யகற்றுபவனும், ஆயிரங்கிரணதாரியும், நக்ஷத்திரங்களுக்கு மத்தியிலே விளங்குபவனும் ஆகிய சந்திரனுக்கும் விதிவசத்தினாலே இராகுவின் பீடை யுண்டாகின்றதே. ஆதலாலே சம்பவித்ததை எண்ணி யெண்ணி மனோவேதனைப்படுதலால் என்ன பிரயோஜனமுண்டு? கல்லான் ஒருவனோடுகூடி அளவில்லா தசுகத்தை அனுபவித்தலினும் கற்றவனோடுசேர்ந்து நித்திய துக்கமுறுவது இதமே. வில்ஹண கவியைப் போன்ற கவிராஜர்கள் யாவருளர்? ஒருவன் மன்மதரூப மெய்தினும் உத்தமகுலத்திலே பிறப்பினும் பூமண்டலம் முழுதினுக்கும் ஏகசக்ராதிபதியாய் இருப்பினும் வித்தையில்லாது இருப்பானேயானால் அவன் முருக்க மலருக்குச் சமமானவனே. இராஜகுமாரர்கள் பெரும்

கல்வியின் மேன்மை கூறல்.

பான்மையாய்த் தங்கள் இராஜ்ய பரிபாலனத்துக்கு வேண்டிய முயற்சிசெய்து காலம் போக்குகின்றனரே யன்றி வித்தியாப்பியாசத்திலே ஒரு சிறிதுங் காலங் கழியார்கள். யௌவனம், [1]தனசம்பத்து, பிரபுத்துவம் [2]அவிவேகதை என்னும் நான்கனுள் ஒவ்வொன்றே ஒருவனுக்கு அனர்த்தத்தை விளைக்குமாகுல், இந்நான் கும் ஒருங்கு சேர்ந்திருக்கப் பெற்றவர்கள் யாது புரி யார்கள்? இத்தன்மையினராகிய இராஜகுமாரர்களை நான் ஒரு காலத்தும் விவாகஞ் செய்யேன். வித்தையே மனுஷருக்கு விசேஷமான ரூபம்; வித்தையே காவற்செய்த திரவியம்; வித்தையே போகத்தை யும் கீர்த்தியையும் சுகத்தையும் விளைக்கின்றது; வித்தையே பரமகுரு; வித்தையே பரதேசத்திலே உற்ற சுற்றம்; வித்தையே முக்கிய தேவதை; வித் தையே அரசர்களாலும் பூசிக்கப்படுகின்றது. திர வியம் இம்மகிமையுடையதோ? வித்தையில்லாதவன் மிருகத்துக்குச் சமமானவனே. வித்தை தாய்போலவே ஒருவனைச் [3]சம்ரக்ஷணை செய்கின்றது. பிதாவைப் போல எப்போதும் சற்காரியங்களிலே நடத்துகின் றது; மனோரம்மியமான மனையாள்போல மனக்கேதங் களைப்[4] போக்கி மிகவும் ஆனந்தம் விளைவிக்கின்றது; அஷ்டதிக்குகளிலும் பரிசுத்தமான கீர்த்தியைப் பரப்பு கின்றது. கற்பகத் தாருவிற்படரும் காமவல்லி போ லவே வித்தை சர்வசாதக சத்தியுடையதே. இவ்வித மான வித்தை வில்ஹண கவியையே ஆதாரமாகக்

---

[1]பணச்செல்வம். [2]புத்தியின்மை.
[3]பரிபாலனம். [4]துன்பங்கள்.

கொண்டு உறைகின்றது. ஆதலால் இவனை நாயகனுகப் பெறுவதினும் இராஜகுமாரனை விவாகஞ்செய்வது மேன்மையோ? பிதாவே, என் மேற்கொண்ட கோபந் தணிக" என்று சொன்னாள்.

இப்படி யாமினி பூரணதிலகை நீதிமொழிகளைச்சொல்ல, மதனுபிராம மகாராஜன் சிறிது கோபந் தணிந்து, "மகளே! என் கண்மணியே! என் குலமாணிக்க தீபமே! என் தவமே! நீ செய்த பிழைகள் யாவையும் நான் பொறுத்துக் கொண்டேன்; இனி இச்சஞ்சல புத்தியை விட்டுவிடு. ஸ்திரபுத்தி யுடையையாகு. உன் இருதயம் இப்போது பரிசுத்தமாயினமை எனக்கு அளவில்லாத [1]சந்துஷ்டியை உண்டாக்குகின்றது. இனி நான் உனது சுயம்வரத்துக்கு வேண்டிய பிரயத்தனஞ் செய்கின்றேன்; நீ உத்தமனுன இராஜகுமாரன் ஒருவனை விவாகஞ் செய்துகொண்டு அகில சுகம் அடைந்திரு" என்ருன்.

சுயம் வரத்தை நாடும்படி அரசன் வேண்டுதல்.

அது கேட்ட வுடனே அழலூட்டிய [2]நாராசத்தைக் காதின்வழியே புகுவித்தாலன்ன வேதனையடைந்து, [3]சூடகச் செங்கையாலே செவிகளை யடைத்து "பிதாவே! நான் கவிராஜனுகிய வில்ஹணகவியையன்றி வேறொருவனையும் சொப்பனத்திலும் எண்ணேன். இது நிச்சயம். உமது விரதத்தை மேற்கொண்டு, சுயம்வரத்தின் பொருட்டுப் பிரயத்தனஞ்

வில்ஹணனை யன்றி மற்றெவரையும் விரும்பாமையை அறிவித்தல்

[1]சந்தோஷம். [2]அம்பு. [3]வளையல்.

செய்வீரேயானால், நான் இந்தக்ஷணமே பிராண [1]பரித்தியாகஞ் செய்வேன்" என்றாள்.

அப்போது மகாராஜன் அதிகோபமுந் துக்கமு மடைந்து "என்புத்திரியைத் துஷ்ட வில்ஹணன் வஞ்சித்தானே" என்று உடனே சபைக்குப்போய், அங்கே கோடிபாலன் என்பவனைப் பார்த்து, வில்ஹண கவியைக்கட்டி மயான பூமிக்குக் கொண்டு போய்ச் சிரச்சேதம் செய்து வரும்படி கட்டளையிட்டான்.

வில்ஹணனைச் சிரச்சேதம் செய்ய அரசன் ஆஞ்ஞையிடல்

அப்போது கோடிபாலன் எழுந்து நின்று, "சுவாமி, தேவரீர் இட்ட கட்டளைப்படி செய்ய யாதேனும் ஆக்ஷேபமுண்டோ? ஆனாலும் அடியேன் சொல்லப் போவதை [2]க்ஷமித்தருளல்வேண்டும். எவன் கோபத்தாலே சிக்ஷிக்கவும், அனுக்கிரகத்தாலே இரக்ஷிக்கவும் வல்லவனோ அவனையே உத்தமராஜனென்று உலகம் புகழும்; தேவரீர் கட்டளையிட்டது தக்கதேயானாலும் யோக்கியாயோக்கிய விசாரணை செய்வது தகுதியே" என்றான்.

அது கேட்டவுடனே மதனபிராம மகாராஜன் கொடிய நாகம்போலச் சீறி, "கோடிபாலனே, நான் கட்டளையிட்டபடி செய்வதேயன்றி எனக்குப் போதனை செய்வது உன் கடனன்று" என்று சொல்லி உடனே கவிராஜனைக் கொல்லும்படி ஆஞ்ஞை செய்தான்.

---

[1]விடுதல். [2]பொறுத்தல்.

அதுபொழுது, கோடிபாலன் மனமஞ்சி விரைந்தோடி, வில்ஹண கவியைக் கட்டிக்கொண்டு மயான பூமிக்குப்போயினன். போகின்ற வழியிலே அவனைக் கண்ட புருஷர்களும் ஸ்திரீகளும் அநுதாபமுந் துயரமுமடைந்து முகத்திலறைந்து பூமியில் வீழ்ந்து புலம்பினார்கள். இவ்வாறு ஜனங்கள் யாவரும் கவீந்திரனைக்கொலை செய்யத் துணிந்தமை பற்றி, துக்கித்துப் [1]பிரலாபனஞ் செய்துகொண்டிருக்க, வாளுடனும் வேலுடனும் பாசத்துடனும் இராஜனது ஏவலாளர் மயானம் அடைந்தவுடனே, கவிராஜன் கோடி பாலன் முதலியோரைப் பார்த்து, மந்தகாசம் [2]பண்ணி, அதிக சந்தோஷத் துடனே, என்னை மிகச் சீக்கிரத்திலே சிரச்சேதனஞ்செய்யுங்கள்" என்றான். அப்போது அவர்கள் யாவரும் அவனது முகம் சாற்காலத்துப் பாலசூரியன் போலப் பிரகாசித்தலையும், மனோதிடத்துடனின்று புன்னகை செய்வதனையும், மரணஞ் சமீபித்ததே என்பதனைச் சுட்டிச் சிறிதேனும் அஞ்சாமையையும் பற்றி அதிசயமுற்று அவனைப்பார்த்து, "கவீசுரனே! எவ்வெவ்வுலகத்திலுமுள்ள சேதனயுக்தமான பிராணிகள் யாவும் மரணமென்னும் பெயரைக் கேட்பினும் அஞ்சி மயங்கித் தியங்கி வீழுமே; நீர் அவ்வாறாகாது, முகாரவிந்த மலர்ந்து புன்னகை செய்து யோகீசுரர்கள்போல ஆனந்தசாகரத்தே அமிழ்ந்திக் கிடக்கின்றமை எங்கள் எல்லோருக்கும் அதிசயத்தை விளைக்கின்றது. கவீந்திரா! உமது

வில்ஹணன் மரணத்துக்கு அஞ்சாமையைக்கண்டு அனைவரும் அதிசயித்தல்

[1]புலம்பல். [2]புன்னகை.

மகிமை எம்போலிய மூடர்கள் உணரவல்லமோ? உமது ஆனந்தாவேசத்துக்குக் காரணம் யாதென்று அடியேங்கட்கு உரைத்தருள்க" எனப் பலவாறு வேண்டினர்.

மகிழ்ச்சிக்குக் காரணம் உரைத்தல்

அப்போது கவிராஜனாகிய வில் ஹணன், கோடிபாலன் முதலியோ ரைப் பார்த்துச் சொல்வானாயினன் :—

### கட்டளைக் கலித்துறை

காணுருங் கற்பக வுய்யான நாகர் கவினுலகின்
தேனுரு மென்சொற் சசியோ வானந்த தேவதையோ
மாணுரு மம்பக மின்னோ வெனவுரை வஞ்சி நல்லாள்
ஊனுரு நெஞ்ச முறைந்தா ளஃதென்ற னுற்சுகமே.

மின்னற் கொடியன சிற்றிடை யாள்சுக மென்மொழியாள்
அன்னப் பெடையன மென்னடை யாளருட் காமவல்லி
வன்னப் பயோதர மாதங்க மேந்தியென் வாடுமுயிர்
தென்னப்பு மாரற் குடையா வகைபுரி செய்கைநன்றே.

### ஆசிரிய விருத்தம்

சந்திர பாக பிரதிசங் காச
நுதலினள் தாமிலா முகத்தாள்
இந்திர தனுவை யியைந்தொளிர் புருவ
மிலங்குமா னம்பக வணங்கு
தந்திர மியற்றி யளியனேன் மதன
சாயக வேதனை சகிப்பான்
மந்திர மியற்றி யளித்தவா வின்னு
மனத்திடை நினைத்தனன் மகிழ்ந்தே.

மாரசா யகமோ மானினம் பகமோ
மருவரு காவியோ வேலோ
வீரசா சமூக பங்கம தியற்றும்
விழிகொலோ மின்னலோ விடையோ

பூரசா வமுத கும்பமோ குசமோ
பொருவிலா மராளமோ புகலும்
சாரசா கரமோ பிரமதா மணியோ
தமியனே னுளம்புகுந் ததுவே.

குந்தல மிலங்கப் பிரமர சமுக
மொலிசெயக் குலவுநூ புரங்கள்
சிந்தல வரவ மொனிசெயச் சிவந்த
செய்யமென் மதுரவாய் திறந்து
நந்தல மாலை மொழிகுதி யெனவே
நகையிள நிலாவெழ வுரைத்த
பந்தல முறுநற் பயோதர மாமென்
னுளங்குடி புகுந்தனள் பரிந்தே.

காமகச் சளம தகற்றுவா னுதித்த
காலையம் பரிதிநா யகனோ
சோமகற் பகமோ சங்கமா மணியோ
சொல்லரும் பதுமமா மணியோ
மாமக விநோத வேங்கடா சாரி
மணிகொலோ வென்னுளம் புகுந்தே
ஆமகம் புரிந்தொ ரிதயமா மென்ன
வாக்கிய தனியனே னகமே

என்று, இந்தப் பிரகாரமே வில்ஹணகவி அற்புதமனோகரமான சுலோகங்களாலே தனக்கும் இராஜ குமாரிக்கும் உள்ள [1]அனுராகத்தை வியந்தோதியும், அவளது பூஷண குணங்களையும் தன்மேற்கொண்ட ஸ்திர விசுவாசத்தையும் புகழ்ந்து கூறியும் நின்ற சமயத்திலே அவனுக்குப் பக்கமாய் நின்ற கோடிபாலன் முதலியோர் [2]கவிசுபாஷண விசித்திர

பிரஜைகள் பிராண பிச்சை வேண்டுதல்

1மிக்க பிரியம். 2மதுரம் பொருந்திய வாக்கு.

ஜாலத்தில் அகப்பட்டு, அவன்மீது மிகுந்த [1]ஆதரமும் அநுதாபமும் கொண்டு விரைந்தோடி மதனுபிராம மகாராஜனது சந்நிதி சென்று அவன் பாதங்களில் வீழ்ந்து நமஸ்காரஞ் செய்து, பூமண்டலேசா! இவ் வில்ஹணன்போன்ற கவியைப் பூமி எவ்விடத்தேனுங் காணுதல் அரிது. இவனே, முன்னே இருந்த கவிகள் யாரும் ஒரு வடிவெடுத்துப் பிறந்தனரெனச் சொல்ல வேண்டுமேயன்றி, வேறெவ்வாறு [2]பரியாப்திப் [3]பரிநாமங் கூறுவது. ஆயிரம் நாவுடையோனாகிய சேஷனும் இவனது சாமர்த்தியத்தைத் துணிந்து கூறினும் கூறவல்லனல்லனே. மகாராஜனே! நீர் தயைகூர்ந்து இக்கவிராஜனுக்குப் பிராண பிச்சை வழங்கல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

அப்பொழுது மதனுபிராம மகாராஜன் கோபம் நீங்கி, தனது பிரஜைகள்யாவர்க்கும் [4]அநிஷ்டமான கருமம் செய்வது தகுதியன்றென மனத்தெண்ணி, ஆனந்தத்துடனே அவ்வில்ஹணனைத் தன்முன் அழைப்பித்து, இரு கரங்களாலும் அவனைத் தழுவி, தனது சுவர்ணாசனத்தின் மேலிருத்தி உபசாரஞ் செய்து, பின் தன் புத்திரியாகிய யாமினி பூரண திலகையைக் கவீந்திரர், முனீந்திரர், புவீந்திரர் முதலியோரது மகா சபையிலே வில்ஹணகவிக்கு விவாகஞ் செய்விக்க வேண்டுமென்றெண்ணி, நானுவகையான தேசத்து அரசர்களுக்கெல்லாம் பத்திரிகை வரைந்தனுப்பி, இலக்ஷ்மிமந்திரபுரியை அலங்கரிக்கும்படி ஆஞ்ஞா

யாமினி பூரண திலகையை வில்ஹணனுக்குக் கொடுப்பதாக ஓலை போக்குதல்

---

[1]அன்பு. [2]அவசானம்; முடிவு. [3]புகழ்ச்சி. [4]வெறுப்பான.

பித்தனன். மகாராஜனது ஆஞ்ஞை பிறத்தலும் பிரஜைகள் யாவரும் ஆனந்த சாகரத்து அமிழ்ந்திச் செய்வது யாதென்றறியாது ஆனந்த நர்த்தனஞ் செய்தனர், பாடினர், ஓடினர், நகரெங்கும் [1]விதானஞ் சமைப்பித்தனர்; தோரணங் கட்டினர், விரதுவசங்கள் நாட்டினர், பூரண கும்பங்கள் வைத்தனர்; முத்து மாலிகைகளும், புஷ்ப மாலிகைகளும், இரத்தின மாலிகைகளும் எங்குந் தூக்கினர்; நவரத்தின கசித மான தீபங்களேற்றினர்; வீதிகடோறும் பனிநீர் முதலிய பரிமளத் திராவகங்களை ஊற்றினர். கலியாணத்துக்கு வேண்டிய வஸ்துக்கள் யாவையுஞ் சம்பாதித்தனர். நானுதேசத்து அரசர்களும் கலியாண பத்திரங் கண்டவுடனே மகா சந்தோஷமடைந்து சீக்கிரமாய்க் கஜரததுரகபதாதி எனப்படும் சதுரங்க சேனையோடு இலக்ஷுமி மந்திரபுரம் அடைந்தனர்.

திருமணச் சிறப்பு

வந்த வந்த அரசர்களையும் முனிவர்களையும் பண்டிதர்களையும், மற்றைய மகான்களையும், அவ்வவர் தகுதிக்கேற்பச் [2]சம்பாவனை பண்ணி, மதனுபிராம மகாராஜன் அவர்க்கெல்லாம் போஜனுதிகளுக்கு இடஞ்செய்தனன். பின்பு சோதிடர்கள் நியமித்த உத்தமதினத்திலே மங்கல முகூர்த்தத்திலே பண்டிதர்களும் முனிவர்களும் பிராமணர்களும் க்ஷத்திரியரும் ஏனையரும் கூடியிருந்த திவ்விய மணிமண்டபத்திலே, மங்கல தூரியம் ஒலிப்ப, வேதங்கள் கோஷிப்ப, நாடகமாதர் நடிப்ப, பாடகர்கள் பாட, சடங்க விதிகள் செய்து, புரோகிதர் ஏவற்படி புண்டரீகாசனம் ஒருவிப் பாதங்கள்

---

[1]மேற்கட்டி. [2]மரியாதை.

த்ரையிற் பாதம் படவந்த மகாலக்ஷ்மி போன்ற யாமினி பூரண திலகை என்னும் பெண்கள் நாயகத்தின் [1]ஜிதசங்கமான கழுத்திமேல சர்வாலங்கார காத்திரனுகிய வில்ஹணன் மங்கலசூத்திரந் தரித்தனன். மங்கலசூத்திர தாரணம் நிகழ்ந்த சமயத்தே தானே வாத்தியங்கள் கடல்போல முழங்கின. சபையிலுள்ளார் யாவரும் கைகொட்டித் தத்தம் ஆனந்தத்தைக் காட்டினர். மற்றைய விவாக கருமங்கள் யாவும் முடிந்த பின்பு சபையோர் யாவரும் "கவீந்திரனுகிய வில்ஹணனும், நரேந்திர சுதையாகிய யாமினி பூரண திலகையும் எந்நாளும் அகில போகங்களையும் அனுபவித்து வாழ்க" என்று ஆசீர்வாதஞ் செய்தனர். அந்தப் பொழுதத்து, வந்தோர் யாருக்கும் செய்யவேண்டிய உபசாரங்கள் யாவும் சிரத்தையுடன் செய்து, அவர்கள் யாவருக்கும் அமிர்தின் இனிய போனகம் அருத்தித் தத்தம் பதிக்குச் செல்லுமாறு செய்து, பிராமணரது மனத்து அவாக்கெடத் திரவியங்களையும் வஸ்திரங்களையும் போஜனாதிகளையும் வழங்கி, [2]அதுல்லிய பண்டிதர்களாகிய திருவேங்கடாசாரியார் ஸ்ரீநிவாசாசாரியர் போன்ற மகான்களைச் சிரத்தையோடு சிரத்திற்குவித்த கரத்தினனய்ச் சாஷ்டாங்க நமஸ்காரம்செய்து, அவர்களது திவ்விய சரணபுண்டரீகங்களில் சுகந்தத்திராவகங்களால் [3]இலேபனஞ் செய்து, தோத்திரித்து, அவரவர் யதாஸ்தானஞ் செல்லுமாறியற்றினன்.

பாணிக்கிரகண விதியின் பின்னர்க் கவீந்திரனுகிய வில்ஹணனும் பிரமதா ரத்தினமாகிய யாமினி பூரண

---

[1]வெண்சங்கை யொத்த. [2]ஒப்பில்லாத. [3]பூசுதல்.

திலகையும் புருஷோத்தமராகிய விஷ்
பெரு மகிழ்ச்சி ணுவும் மகாலக்ஷுமியும் போலவும்,
இந்திரனும் சசிதேவியும் போலவும்
பரஸ்பர சந்தோஷ காரணராய், தண் பனிநீர்ச்சிவிறி கொண்டு பூந்தடங்களில் ஜலக்கிரீடை செய்தும், நந்த வனங்களில் உலாவி மலர்கொய்தும், செய்குன்று களிலே விளையாடியும், சாஸ்திராப்பியாசம் செய்தும், அற்புத தேவபாஷையாகிய சமஸ்கிருத பாஷையிலே சம்பாஷித்தலாகிய மகாசுகமடைந்தும், சாஸ்திரத் தில் மொழிந்த பிரகாரமாகவே தேவாதி தேவராயும் பஞ்சகிருத்தியம் நடாத்தும்படி பிரமா, விஷ்ணு, உருத் திரன், மகேசுரன், சதாசிவன் எனப்படும் பஞ்ச மூர்த்திகளை யுண்டாக்கி அவர்களோடு ஒருகாலம் சம கமனம் செய்பவராயும் சர்வாந்த காலத்திலே கடாகாச ஆதாரமான பூதாகாசமென்ன நிற்பவராயும் இருக் கும் பரப்பிரமமாகிய சுப்பிரமணிய சுவாமிகளை மனம் வாக்குக் காயம் என்னும் கரணத்திரயத்தாலும் சிந்தித் தும், வாழ்த்தியும், வணங்கியும் இனிது வாழ்ந்திருந் தனர்.

விருத்தம்

அணுதியாம் பாச வல்லிரு ளகற்று
மருணனை யறுமுகப் பானை
தணுதியா னிகந்தோர் தம்மனத் தொளிரும்
தாவறு சதோதய விளக்கை
மணுதிகட் கெட்டா வடிவுடை யானை
மன்னுசீ ருடம்பிடிக் கரனை
எணுதிரு கண்ணி னரியமா மணியை
யேகநா யகனையேத் திடுவாம்.

முற்றிற்று

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

# ஆரிய தமிழ் வசன நூல்கள்

| | ரூ. அ. பை. |
|---|---|
| பிரபஞ்ச விசாரம் | 1 8 0 |
| நாவலர் சரித்திரம் | 0 8 0 |
| நால்வர் சரித்திரம் | 0 1 0 |
| சந்தானாசாரியர் | 0 0 6 |
| வில்ஹணீயம் | 0 3 0 |
| சைவபோதம் | 0 5 0 |
| சைவசித்தாந்தச் சுருக்கம் | 0 7 0 |
| திருவெண்காடர் | 0 4 0 |
| தாயுமானவர் | 0 2 0 |
| நாப்பழக்கத்திற்கான நற்கதைகள் | 0 2 6 |
| தமிழ் வியாசம் I (விஷயமும் குறிப்பும்) | 0 5 0 |
| ஷை II ,, | 0 10 0 |
| திராவிடப் பிரகாசிகை | 3 8 0 |

விலாசம் :—

சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை,
20. காரணேசுரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை.